முருகப்பெருமான் துணை

**மகான் சேதுமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**04.09.2021**, சனிக்கிழமை

1. பணிவு கொண்ட பெருமக்களை
பாருலகில் தேடிக் கண்டு
துணிவு கொண்டு உலக மாற்றம்
தொண்டு வகை செய்யும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ யாளி திங்கள்
வரமென மூவாறோர்திகதி காரி வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 19ம் நாள், 04.09.2021 சனிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை சேதுமுனிவர் யானும்
அறிவிப்பேன் உலக நலம் பெற
ஆசி தந்து அரங்க ஞானி காட்டும்
ஆற்றல் மிக்க ஞான வழிகள் தன்னை
4. தன்னையே ஏற்று உலகோர்
தவராசன் வழிக்கு வர
அண்ணலே என சரணாகதியை
அடைந்து தொண்டர்களாகிவர
5. வருகவே உலக நிலை மாறும்
வாட்டும் துன்பம் விலகும்
தரும குணம் மனபலம் கூடி
தரணியோர்க்கு ஆறுமுகனார் தயவை
6. தயவை பெறும் சக்தி கிட்டி
தரணியே நல்ல மீட்பு பெறும்
நேயமிக்க ஞானவான்களாகவே
நிலவுலக மக்களெல்லாம் தேறி
7. தேறியே கலித் துன்பம் விரட்டும்
திருவருள் தன்மை கூடியே
மாறுதல் தனை பேருலகம் கண்டு
மக்களுக்குப் பாதுகாப்பும் மகிழ்வும்
8. மகிழ்வுடன் வருகின்ற காலம்
மகான்கள் நிரம்பும் படியான
அகிலத்தில் படைப்பைதரும்
ஆற்றல்மிக்க நிலை அடைந்தும்

9. அடைந்தும் உலக மக்கள்
அரங்கமகான் வழி அற்புதத்தை
தடையற கண்டு சிறப்பர்
தனித்துவம் கொண்டு தேறி

10. தேறியே சன்மார்க்கம் மிகுந்த
தெய்வீகச் சமூகம் படைத்து
ஆறுமுகனார் வெளிப்பாடுகண்டு
அருளும் காக்கும் உலகை

11. உலகை உருவாக்கி இனிதே
உண்மை மிகுந்த ஞான ஆட்சி
வேலவன் ஆசிபடவே படைப்பர்
விளம்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–